EP : 28/2023

நாள் : 13.08.2024

எ.ம.சா :1

பெயர் : ஸ்டீபன் செல்வராஜ்

மனுதாரர் குறுக்கு விசாரணை

மனுதாரர் நிறுவனத்திடம் டிப்பர் லாரி வாங்க 2011ல் 20 லட்சம் ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் சரி. அந்த கடன் வாங்குவதற்கு மனுதார் நிறுவனத்திடம் சில ஆவணங்கள் எழுதிக்கொடுத்தேன்எ ன்றால் சரி. அந்த கடனுக்கு மாதத்தவணை செலுத்துவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரி. 5 லட்சம் ரூபாய் திருப்பி செலுத்திவிட்டேன். அந்த தவணைத் தொகையை மாதம்தோறும் சரியாக செலுத்தாததால் எனது வண்டியை பறிமுதல் செய்து இசைவு தீர்ப்பாயம் முன்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வண்டியை பறிமுதல் செய்தது உண்மை. 2 மாதம் EMI கட்டாததால் வண்டியை சீஸ் பண்ணீனார்கள். நான் கடன் தொகையை திருப்பி செலுத்த போதுமான வருமானம் வசதி உள்ளது என்பதால் எனக்கு கடன் கொடுத்தார்கள் என்றால் அந்த வண்டியை வைத்து சம்பாதித்து திருப்பி கட்டிவிடுவேன் என்று சான்று வாங்கி கொடுத்தேன் அதனால் கடன் கொடுத்தார்கள். கடனை திருப்பி கட்ட முடியாது என்று அறிவிக்க கோரி நான் நீதிமன்றத்தில் Insolvancy Petition எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 2 ஆம் எதிர்மனுதாரர் கூலி வேலை செய்கிறார். அவரும் கடனை திருப்பி கட்ட முடியாது என்று அறிவிக்க கோரி நான் நீதிமன்றத்தில் Insolvancy Petition எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எங்களுக்கு கடனை திருப்பி செலுத்த போதுமான வசதி உள்ளது என்றால் சரியல்ல.